

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பாக தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆலோசனையின் படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாடும் விதமாக திருப்பரங்குன்றம் வடக்கு பகுதியில் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விமல் தலைமையில், பகுதி செயலாளர் கிருஷ்ண பாண்டியன், மதுரை மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் சுவிதா விமல், வட்டச் செயலாளர் எம்.ஆர்.பி.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. உடன் கழக நிர்வாகிகள் டிப்போ ரவி, சிவக்குமார், நீதிமன்னன், இயேசு, முத்து என்ற ரமேஷ், சரவணன்,கூடல் ராஜேஷ், குருசாமி, கார்த்திக், பூட்டோ மற்றும் கழகத்தினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் இருந்தனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் - செம்மொழி நாள் விழா!

# தமிழகமெங்கும் மின்கழகத் தொ.மு.ச.வினர் நலத்திட்ட உதவிகள்!

## மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, ஜூன் 8- மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் - தொ.மு.ச. பேரவை இணைப்பொதுச்செயலாளர் பா.மணிமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

செம்மொழி நாள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா, தமிழகமெங்கும் மின் கழகத் தொ.மு.ச.வினர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வாரி வழங்கிய வள்ளல் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா, சென்னை, அண்ணாசாலை மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள மின்கழகத் தொ.மு.ச. தலைமைச்சங்கத்தில், ஜூன் 6 ஆம் தேதி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

**நல உதவிகள்**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 நபர்களுக்கு ரூ.1500/- மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்பட்டது.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகள் :**

5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், 13 முறை சட்டமன்ற தேர்தலில் களம் கண்டு, தோல்வியே காணாத, சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்து தமிழ்நாட்டின் ஒரு தலைமுறை மாற்றத்திற்கே வித்திட்டு, அவர்களின் வாழ்கையில் விடியலை ஏற்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்றால் மிகையாகாது. தம்மை வசைப்பாடியவர்களையும், வாழவைத்து, அவர்களையும் தன் வசப்படுத்தி அவர்களின் வாழ்த்தையும் பெற்றவர் கலைஞர், தமது வாழ்நாள் முழுவதும் இந்திய அரசியலில் தவிர்க்க முடியாத மாபெரும் தலைவராக விளங்கியவர்.

**5 முறை முதலமைச்சர்:**

தமிழ்நாட்டின் 5 முறை முதலமைச்சராக பொறுப்பு வகித்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வழங்கிய சாதனைகளில் சில:

**1969-1971 முதல் முறை :**

● 01.12.1969 முதல் மின்வாரிய தொழிலாளர்களுக்கு முதன்முதலில் ஊதிய உயர்வு 27.05.1970ல் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

● தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் செல்ல மின்வழித்தடம் அமைத்தார்.

**1971-76 இரண்டாம் முறை**

● மே1 தொழிலாளர் தினம் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறையாக அறிவித்தார்.

● மின்சார வாரியத்தில் பணிபுரிந்த 40,000 ஒப்பந்த தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்தார்கள்.

பணியிலிருக்கும் பணியாளர்களுக்கு செய்த சாதனை மட்டும் இல்லாமல், பணியாளர் இறந்தால், அவர்களது இறுதி சடங்குகளுக்காக, குடும்ப பாதுகாப்பு நிதியை ஏற்படுத்தி அவர்களது குடும்பத்தார்களுக்கு வழங்க உத்தரவு பிறப்பித்தவர் கலைஞர் அவர்கள். (இது எந்தொரு தொழிற்சங்கமும் வைக்காத கோரிக்கை)



**1989-91 (மூன்றாம் முறை)**

● 01.12.1988 முதல் மின்வாரிய பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு 31.07.1989 வழங்கினார்கள்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்.

மின்வாரிய தொழிலாளர்களுக்கு 1989ல் அகவிலைப்படி உயர்வை சதவீதத்தில் வழங்கினார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சுமார் 13000 ஒப்பந்த தொழிலாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டனர்.

**1996-2001 நான்காம் முறை**

மேலும்,

01.12.1996ம் ஆண்டு ஊதிய உயர்வில் மத்திய அரசு ஊழியர்கள் பெற்று வந்த 40 % சதவிகிதம் 08.07.1998 அன்று மின்வாரிய தொழிலாளர்களுக்கும் வழங்கினார்கள்.

● மேலும் 7 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 1 ஆண்டுயர்வு

● 17 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 2 ஆண்டுயர்வு

● 27ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 3 ஆண்டுயர்வு

● 37 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 4 ஆண்டுயர்வு

என வழங்கி மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களை மகிழ்ச்சியடைய செய்தார்.

● அனல்மின் நிலையங்களில் பணிபுரிந்த 11500 ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்தார்கள்.

**2006-2011 ஐந்தாம் முறை**

● 7 புதிய மின்உற்பத்தி நிலையங்கள் மேட்டூர், வல்லூர், எண்ணூர் துவக்கினார்.

● 01.08.2006 ல் மின்வாரிய தொழிலாளர்களுக்கு 50 % சதவிகிதம் அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து இன்னொரு ஊதிய உயர்வு போல மின்வாரியத்தினருக்கு வழங்கினார்.

● 30.06.2007ல் வாரியம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு அனைத்து தொழிலாளர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வு மற்றும் ரூ.1000 சன்மானம் வழங்கினார்கள். மேலும், ஒய்வு பெற்றவர்களுக்கு ரூ.1000 சன்மானம் வழங்கினார் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ.500/ சன்மானம் வழங்கினார்.

● 2010-2011 ஒரே ஆண்டில் 77,158 இலவச வேளாண் மின் இணைப்புகளை வழங்கி சாதனைப் படைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்_அவர்கள்.

● 01.12.2007ம் ஆண்டு மீண்டும் 40 % ஊதிய உயர்வை மின்வாரிய பணியாளர்களும் 18.11.2009ல் வழங்கினார்கள்.

● அ.தி.மு.க. அரசால் 5 ஆண்டுக்கு என உயர்த்திய ஒப்பந்த காலம் மீண்டும் 4 ஆண்டுகள் என்று குறைத்து ஆணை பிறப்பித்தார்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

● ஆண்டுயர்வு 3 சதவிகிதமாக, அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல வழங்கப்பட்டது.

● நிலுவைத்தொகை 01.12.2007 முதலே வழங்கப்பட்டது.

● 10.08.2007ல் மின் பகிர்மான வட்டங்களில் பணியாற்றி வந்த ஒப்பந்த தொழிலாளர்கள் 21,600 பணி நிரந்தரம் செய்தார்கள். (என மொத்தம் 73100 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்)

மேலும், அகவிலைப்படி, போனஸ் மற்றும் கருணைத் தொகை, பொங்கல்பரிசு என பல சலுகைகளை கொடுத்தார்கள்.

அனல்மின் நிலை யங்கள், நீர்மின் நிலையங்கள் என பல திட்டங்களை உருவாக்கி, மின்சாரத் துறைக்கு வளமான கட்டமைப்பை உருவாக்கி, நவீன தமிழகத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**திராவிட மாடல் தமிழ்நாடு முதல்வர் சாதனைகள்**

2021ம் ஆண்டு, மே மாதம் 7ம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு ஏற்று கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்கள், அப்போது நம்மை சூழ்ந்திருந்த கொரானா நோயின் தாக்கத்திலிருந்து நம்மை காப்பாற்றினார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிபுரிகிறவர்களுக்கும், ஒய்வூதியதாரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகையுடன்

போனஸ், அதிகாரிகளுக்கு பொங்கல்பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர செய்தார்கள்.

**மின்வாரியத்தினருக்கு அன்புத் தளபதி செய்த சாதனைகளில் சில, 01.12.2019 முதல் ஊதிய உயர்வு,**

● 6 சதவிகித ஊதிய உயர்வு

● 12/2019 முதல் 3/2022 வரை 28 மாதங்களுக்கு ரூ.500/

● ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை 01.04.2022 முதல்

● 31.05.2023 வரை கணக்கிட்டு வழங்கவும்,

● 01.12.2019 அன்று பத்து வருடங்கள் பணி முடித்த தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3 சதவீதம் எனவும் அனைவரும் மகிழும் வண்ணம் முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள் அறிவித்தார்கள்.

பொதுமக்கள் மின் குறைகளை தெரிவித்திட மின்வாரிய தலைமை அலுவலகத்தில் "மின்னகம்" என்ற புதிய மின்நுகர்வோர் சேவை மையம் ஏற்படுத்தினார்கள்.

மூன்றாண்டுகளில் 1,69,564 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி சாதனை படைத்தார்.

மகளிருக்கு மகப்பேறு விடுப்பு நாட்களையும், "Probation / Promotion கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு வழங்கினார்கள்.

● அ.தி.மு.க. ஆட்சியில் 10 சதவிகிதமாக குறைத்த போனஸ் மற்றும் கருணைத் தொகை, கழக ஆட்சியில் அன்புத்தளபதி அவர்கள் மீண்டும் 20 சதவீகிதமாக உயர்த்தி வழங்கினார்.

● அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அகவிலைப்படி-ஐ தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு ஏற்றவுடன் நிலுவைத்தொகையுடன் வழங்கி, மின்வாரியத்தினரை மகிழ்ச்சி அடையச் செய்தார்கள்.

● அ.தி.மு.க. ஆட்சியில் மறுக்கப்பட்ட, ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்யும் முறையை மீண்டும் அக்டோபர் மாதம் முதல் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

● தொழிலாளர்கள் விரோத அ.தி.மு.க. ஆட்சியில் பத்தாண்டுகளாக (2011-2021) கிடப்பில் போடப்பட்ட, முத்தரப்பு ஒப்பந்தத்தை அன்புத்தளபதி அவர்கள் ஏற்படுத்தி, பணிபாதுகாப்பு, ஊதியம், ஒய்வூதியம் மற்றும் பெற்று வந்த சலுகைகள் பாதிக்காத வண்ணம், முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தி, மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள்,

பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்களின் அச்சம் என்னும் இருள் நீக்கி, மகிழ்ச்சி என்னும் விடியலை ஏற்படுத்தினார்கள்.

**மக்கள் நலன் பாதுகாக்கும் அரசு:**

மகளிர்களுக்கு விடியல் பேருந்து பயணம், பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், முதல்வர் மருந்தகம், நான் முதல்வன் திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் திட்டம், முதல்வரின் முகவரி திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், பசுமை தமிழ்நாடு திட்டம், எல்லாவற்றிற்கும் மணிமகுடமாக திகழும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என பல திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், பொதுமக்கள் நலனில் சிறிதும் அக்கறையின்றி செயல்பட்டு, வீட்டுமனை பட்டா வழங்குவதை தவிர்த்த நிலையில், முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள், தமிழ்நாட்டில் 86000, ஏழை, எளிய மக்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க, அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கி, தமிழ்நாடு மக்களுக்கு பட்டா அளித்து அவர்களை மகிழ்ச்சியடைய செய்து, தமிழ்நாட்டு அனைத்து பிரிவு மக்களின் நலன் பாதுகாக்கும் அரசு, நம் திராவிட மாடல் அரசு என நிரூபித்துள்ளார்கள், நமது முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள்.

**களம் காண்போம் காவியம் படைப்போம்:**

மின்வாரியத்தில் முதன்மைச் சங்கமான, மின்கழகத் தொ.மு.ச. களம்கண்ட அனைத்து தேர்தல்களிலும், பொதுமக்களை நேரடியாக சந்தித்து, அன்புத் தளபதி அவர்கள் பொதுமக்களுக்கு செய்த சாதனைகளை எடுத்து கூறி வாக்குகள் சேகரித்தோம்.

அதே போல 2026 சட்டமன்றத் தேர்தலிலும், தமிழகமெங்கும் மின்கழகத் தொ.மு.ச.வினர், தீவிர களப்பணியாற்றி, நம் தோழமைக்கட்சி வேட்பாளர்களையும் மாபெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்றும், அன்புத்தளபதி அவர்கள், சொன்னதைப் போல, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்பதற்கேற்பவும், 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்ற, நம் அனைவரும் களம் கண்டு வெற்றி காவியம் படைக்க உறுதி ஏற்போம் என்று மின்கழகத்தொமுச நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்களிடையே, மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை இணை பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# ஆரியப்பகை வென்ற திராவிடச் சூரியன் புகழ் ஓங்குக!



முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள். அது ஒரு தனி மனிதனின் பிறந்தநாள் கொண்டாட்டம் அன்று. சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஒரு பேரியக்கத்தின் கொள்கைகளின் பேரிகை. கொள்கைகளின்றி இன்று கட்டமைக்கப்படும் தமிழ்ச் சமூகத்திற்குக் காலத்தின் தேவையாக இந்நாள் அமைகிறது.

கலைஞரின் சிறப்புகளைக் கட்டுரைக்குள் கட்டிவிட முடியாது. ஆனால் அவரின் சிறப்புகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது தமிழர்களின் வாழ்வும் சீர் அடைந்திருப்பதை உணர முடிகிறது. அரசியல், பத்திரிக்கை, இலக்கியம், திரைப்படம், கவிதை, நாடகம், மேடைப் பேச்சு எனப் பல் துறை அறிஞராக விளங்கிய கலைஞர் அத்துறைகளில் முத்திரை பதித்தது மட்டும் கலைஞரின் பெருமை இல்லை. அத்தனை துறைகளிலும் சமூக நீதியையும், பகுத்தறிவையும், புதுமையையும் பரப்பி அத்துறைகளின் போக்கில் மாற்றம் ஏற்படுவதற்குப் பெரும் பங்களிப்பைச் செய்ததே கலைஞரின் பெருமையாகும். அத்தனை துறைகளிலும் கலைஞருக்கு முன், கலைஞருக்குப் பின் என்று பகுத்துப் பார்க்கும் அளவிற்கு ஆளுமை செலுத்தியதன்று அவருடைய சிறப்பு. அது மக்கள் விழிப்புணர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பயன்பட்டதே, அதுதான் கலைஞரின் சிறப்பு.

"பகுத்தறிவாளராகவும், ஆட்சிக்கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்னோசனையுடனும் அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்களுக்குப் புதுவாழ்வு தருபவர் ஆகிறார் நமது கலைஞர்" என்று தந்தை பெரியார் கலைஞரைப் பாராட்டினார். அதன்படியே மிகச் சிறந்த ஆட்சியாளராக பல முற்போக்கு முன்னோடித் திட்டங்களைத் தமிழ் நாட்டிற்குத் தந்து வர்ணாசிரம அமைப்பால் பின் தங்கியிருந்த சமூகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றார். இந்தியாவில் தமிழ் நாடு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வளர்ச்சியில் முன்னிலையில் இருப்பதே இதற்குச் சான்று.

இத்தனையும் பெரியார், அண்ணா வகுத்துத் தந்த பாதை என்று சொல்லி அவர்கள் கொள்கைகளையே மக்களிடம் பரப்புரை செய்தார். தொண்டருக்குத் தொண்டராகக் கழகப் பணி ஆற்றினார். கலைஞர் வேறு கழகம் வேறு என்று பிரித்துப் பார்க்க முயன்றால் அம்முயற்சி தோலவியைத் தழுவும். அதனால் தான் தி.மு.கழகமும் வேரூன்றி நிற்கிறது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக அரசியலில் சூறாவளியாக சுழன்று வந்தவர் இப்போது தென்றலாக வீசுகிறார். அரசியலும் கலைஞரைச் சுற்றியே நகர்கிறது. இன்று கட்சி தொடங்குவோர் முதல் ஆட்சிக் கட்டிலில் இருப்போர் வரை கலைஞரைச் சுற்றியே காய்களை நகர்த்துகிறார்கள். அகவை 94 ஆன போதிலும் அரசியலில் கலைஞரே கதாநாயகராக இருக்கிறார்.

தன்னை "மானமுள்ள சுயமரியாதைக்காரன்" என்று ஒற்றை வரியில் வெளிப்படுத்தினார். இந்த வார்த்தைகளை இன்றைய தமிழகச் சூழலில் கேட்கும் போது, தமிழ்நாடு எப்படிப்பட்ட ஆட்சியாளரைக் கொண்டிருக்கிறது என்பது விளங்குகிறது.

தமிழ்நாட்டை இருள் மட்டும் சூழவில்லை, வெம்மையும் வாட்டியெடுக்கிறது. நிழலின் அருமை வெயிலில் இப்போது மக்களுக்கும் தெரிகிறது சில மக்கள் தலைவர்களுக்கும் தெரிகிறது. உதயசூரியனாய் ஒளிக் கீற்றை வீசும் கலைஞர், பழுத்த மரமாய் குளிர்ச்சியூட்டும் நிழலையும் தருபவர்.

தமிழகத்தில் முக்கால் நூற்றாண்டாய் இந்துத்துவாவின் நிம்மதியைக் கலைத்த பெயர், நித்திரையைத் தொலைத்த பெயர், பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை தகர்த்த பெயர் ' முத்தமிழறிஞர் கலைஞர்.. பெரியாருக்குப்பின் பார்ப்பனர்களால் இந்து மத வெறியர்களாலும் வெறுக்கப்பட்ட பெயரும் அதே பெயர்தான்.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழக பேச்சாளர்**

காரணம் பல இருந்தாலும் உச்ச, உயர் நீதி மன்றங்களில் பார்ப்பனர்களை மட்டுமே My Lord என்று அழைத்து வந்த நிலையில், நாடு முழுவதும் இந்து மனுசாஸ்திரம் எந்த மக்களை ஊருக்கு ஒதுக்குப்புறமாக, சேரியில் தள்ளி, தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் என்று ஒதுக்கியதோ அந்தச் சேரியில் பிறந்த வரதராசனாரை இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாக, சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக அமர்த்தி, பார்ப்பனர்கள் மற்றும் முதல் நிலை, இடைநிலை சாதியினர் யாராக இருந்தாலும் சேரி மனிதனை My Lord என அழைக்க வைத்தார்.

இந்து மனுசாஸ்திரத்தின்படி, பாவ யோனியில் பிறந்தவர்களாக இழிவுபடுத்தப்பட்ட பெண் இனத்தின் விடுதலைக்கு பெரியார் 1929 இல் செங்கற்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்திற்குச் சட்ட வடிவம் கொடுக்க 1989 இல் 'தகப்பன் சொத்தில் பெண்களுக்குச் சரிபங்கு' என்று சட்டம், எட்டாம் வகுப்புவரையாவது பெண்களைப் படிக்க வைக்கட்டும் என்று 'திருமண உதவித் திட்டம்' என்ற முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தினார்.

இதே நோக்கத்தில் R.S.S ஆட்சி செய்யும் மத்தியப் பிரதேசத்தில் 'கன்னிகாதான யோஜனா' என்ற பெயரில் திருமண உதவித் திட்டம் உண்டு. அதற்கு அந்தப் பெண் திருமண நாள் வரை கன்னித்தன்மையுடன் இருக்கிறார் என்று மருத்துவர் சான்று வழங்க வேண்டும் என்ற நிலை உள்ளது.

உள்ளாட்சி நிர்வாகத்தில், அரசுப் பணிகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடுச் சட்டம் கொண்டுவந்தார். 'பணிக்குச் செல்லும் பெண்கள் அனைவரும் நடத்தை கெட்டவர்கள்' என்று சொன்ன லோககுரு காஞ்சி சங்கராச்சாரி ஜெயந்திரனின் அறிவிப்போடு கலைஞரின் செயல்பாடுகளை ஒப்பிட்டுப் பாருங்கள். கலைஞரைப் புரிந்து கொள்ளலாம்.

சாதியின் இறுக்கத்தைப் போக்க வேண்டு மென்றால் அனைத்து மக்களையும் சரிசமமாக வாழ வைக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ் விடங்களை "சேரி" என்று தனியாக ஒதுக்கி வைக்கக் கூடாது. அனைத்து மக்களும் வாழும் பகுதிகளில் சேரி மக்களுக்கு வாழ்விடங்கள் அமைத்துத் தரவேண்டும் என்ற தந்தை பெரியாரின் வேண்டு கோளை ஏற்று, அவர் பெயரிலேயே பெரியார் நினைவு சமத்துவபுரங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தி, அந்த இடங்களில் மத அடையாளங் களான கோவில், தேவாலயம், மசூதி என எவற்றையும் அமைக்கக்கூடாது, அதற்குப் பதிலாக நூலகம் பள்ளிக்கூடங்கள்தான் இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றினார்.

சாதி மறுப்புத் திருமணம் புரிவோருக்கு உதவித் தொகையுடன் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமைச் சட்டம். மூன்றாம் பாலினத்தவரைத் 'திருநங்கை' எனப் பெயரிட்டு அழைத்து அவர்களுக்கு கல்வி வேலை வாய்ப்புகளில் முன்னுரிமைச் சட்டம் இயற்றி நாட்டிற்கே வழி காட்டினார்.

சமூகநீதி மறுக்கப்பட்ட சமுதாயங்களான இசுலாமிய சிறுபான்மையினருக்கு நாட்டிலேயே முதல்முறையாக 3.5 சத உள்இடஒதுக்கீடு தாழ்த்தப் பட்டோரில் தாழ்த்தப்பட்டவர்களான அருந்ததியர் மக்களுக்கு 3 சதவீத உள்இடஒதுக்கீடு வன்னியர் மற்றும் சீர்மரபினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என அறிவித்து உள்ஒதுக்கீடு, முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்த கொங்குவெள்ளாளர்களை பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் சேர்த்தது உயர் கல்வி பயில கிராமப்புற முதல் பட்டதாரி மாணவர்களுக்கு முன்னுரிமைச் சட்டம் போன்ற அடுக்கடுக் கான திட்டங்களால், சமூக நீதியில் சரித்திரம் படைத்து சாதித்த காரணத்தால் கல்வி வேலை வாய்ப்புகளில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குப் பார்ப்பனர்களின் ஆதிக்கம் அடித்து நொறுக்கப்பட்டது. சமூகநீதியைக் கல்வி, வேலை வாய்ப்புகளில் மட்டும் அவர் கடைபிடிக்கவில்லை. தனது கட்சியிலும் மிகத்தீவிரமாகச் செயல்படுத்தினார். பார்ப்பனர்களைத் தவிர்த்து இசுலாமியர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என அனைவருக்கும் உரிய பிரதிநிதித் நடைமுறைப்படுத்தினார். தான் ஆட்சி செய்த அய்ந்து முறையும் பார்ப்பனர் அல்லாதோர் அமைச்சரவையைத்தான் அமைத்தார்.

தந்தை பெரியாரின் இறுதி இலட்சியமான கருவறைத் தீண்டாமையை ஒழிக்க அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் சட்டத்தை இருமுறை நிறை வேற்றினார். அதற்குப் பார்ப்பனர்கள் உச்சநீதி மன்றம் சென்று தடை வாங்கியபோதும் தனது வாழ்நாளின் இறுதிக்கட்டத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையில், உயிருடன் இருக்கும்போதே தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் நீக்கும் வகையில், "பார்ப்பனர் அல்லாத அர்ச்சகரை தமிழக இந்து அறநிலையத்துறை கோவிலில் நியமிக்கப்பட்டார்" என்ற செய்தி வந்த பிறகுதான் மறைந்தார்.

கன்னியாகுமரியில் தந்தை பெரியார் முன்னிருத்திய 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சமத்துவம் பாடிய வள்ளுவருக்கு 133 அடியில் வானுயர்ந்த சிலை அமைத்து 'இது திராவிடர் மண்', 'வள்ளுவர் திராவிடர் களின் அடையாளம்' என்று உலகிற்கு உணர்த்தினார்.

தமிழகத்தில் முக்கால் நூற்றாண்டு, பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்தும் இந்துத்துவ சித்தாந்தத்தைச் சிதைத்தும் ஆரியப்பகை வென்ற திராவிடச் சூரியன் என்பதால்தான் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தில் ஊறிப்போன பார்ப்பனர்களால் அவரை ஜீரணிக்க முடியவில்லை. தந்தை பெரியாரைப்போலவே 95 ஆண்டுகாலம் நிறை வாழ்வு வாழ்ந்து மறைந்தார். அவரை மெரினாவில் அடக்கம் செய்ய முடியாது என்று தமிழ் நாட்டு பி.ஜே.பி. அடிமை அரசு முடிவு செய்தபோது அதை வரவேற்று, துக்ளக், ஆர்.எஸ்.எஸ். குருமூர்த்தி என்ற பார்ப்பனர் அகம் மகிழ்ந்தார், நீதிமன்றம் மெரினாவில் இடம் ஒதுக்கியதும் அதைக் கண்டித்தார்.

இது தலைவர் கலைஞருக்கு மட்டும் நேர்ந்ததல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் இறந்த போதும் எச்.வி. ஹண்டே என்ற பார்ப்பனர் "மெரினாவில் அண்ணாவை அடக்கம் செய்யக் கூடாது. மீறி அடக்கம் செய்தால் என் வீட்டு நாய் இறந்தால் அண்ணாவின் சமாதியில் அடக்கம் செய்வேன்" என்று கொக்கரித்தார். பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணாவின் பெயரில் கட்சி தொடங்கி அரசு அமைத்தபோது அந்த அமைச்சரவையில் இடம்பிடித்த ஒரே பார்ப்பன அமைச்சர் இந்த ஹண்டே தான். அண்ணாவிற்கு மெரினாவில் இடம் தரக்கூடாது என்றவர் அண்ணா தி.மு.க. வில் அமைச்சரானார்.

பெரியார் மண்ணில் இந்துத்துவா சர்வாதிகாரம் தலைதூக்கி விடாமல் தடுக்கும் பொருட்டும் தன்னுடைய கடைசி காலம் வரை மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்தும் இந்துத்துவா சதிகளை முளையிலேயே கிள்ளி எறிந்து தமிழர்களின் பண்பாட்டு நாகரிகத்திற்கு பாதுகாப்பு அரணாக விளங்கிய தலைவர் கலைஞரின் நீட்சியாக திராவிட மாடல் ஆட்சி நாயகன் தளபதியின் கொள்கை வழித்தடத்தில் நம்முடைய இளம் தலைவர் தன்னுடைய அரசியல் நுழைவு காலத்தில் இருந்து கவனமாக செயல்படுகிறார் என்பது இன்றுவரை அவர்களின் நடவடிக்கைகள் நமக்கு தெள்ளத் தெளிவாக காட்டுகிறது என்பது தான் நிசர்தனமான உண்மை.....

கலைஞர் வழி நடப்போம்!

கழகம் காப்போம்!!

மாண்புமிகு தளபதி அவர்களின் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் உதயமாக உழைப்போம்!!!